மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் , காரியாபட்டி,

**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

காரியாபட்டி

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11–ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2025**

**IN**

**அசல் வழக்கு எண். 237/2024**

ராமு .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1.முருகன்
2.உயர்திரு.மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.
3.உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.
4.உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரியாபட்டி தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
5.உயர்திரு.தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள்,
காரியாபட்டி தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
6.உயர்திரு.தலைமை நில அளவையர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரியாபட்டி தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
7.நில அளவையர் அவர்கள்,
நில அளவையர் அலுவலகம்,
காரியாபட்டி தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
8.உயர்திரு. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,
பாப்பணம் பஞ்சாயத்து,
காரியாபட்டி தாலுகா,
விருதுநகர் மாவட்டம். .... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 03.06.2025 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இடைநிலை மனு எண்.1/2025 ஆக எண்ணிடப்பட்டு இறுதியான விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின்

முன்னர் 11.08.2025 வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கண்ணன் குருசாமி அவர்கள், 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கர்ணன் அவர்களும் முன்னிலையாகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், செய்து கொண்ட இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, பாப்பணம் கிராமத்திலிருக்கும் புல எண். 203/24 ல் 1 வது பிரதிவாதி மேற்படி வாதியின் தாவா புல எண்ணிற்குள் கொட்டி பரப்பியுள்ளதை அகற்ற வேண்டி மேற்படி வாதியின் அனுபவத்தில் எவ்விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது என பரிகாரம் வேண்டி பிரிவு 151 சிபிசி படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**மனுதாரர் மனுவின் சுருக்கம்:—**

2(1). மனுதாரர்/வாதி தரப்பில், விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகாவிற்குட்பட்ட கிராம மக்கள் நலனுக்காக அக்கிராமத்திற்கு பாத்தியப்பட்ட அரசு நத்தம் புறம்போக்கு நிலம், சர்வே எண்.203 ல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் மூலம் மனுதாரர்/வாதிக்கு 5 வது பிரதிவாதி செயல்முறை ஆணையின் படி கடந்த 09.10.2019 ம் தேதி HSD No.42/1429-ன் படி சர்வே எண்.203/24, பரப்பளவு 0.02.00-க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், தாவா புல எண்ணிற்கு தெற்கு பக்கம் 1 1/2 செண்டு பரப்பளவு கொண்ட அரசு நத்தம் புறம்போக்கு பட்டா பதிவில்லாத இடத்தை சேகர் அனுபவம் செய்து வந்த இடத்தை வாய்மொழி வழியாக 1 வது பிரதிவாதிக்கு அனுபவம் செய்ய அனுமதித்து அதனை 1 வது பிரதிவாதி அனுபவம் செய்து வந்த நிலையில் மனுதாரர்/வாதிக்கு பாத்தியமான தாவா புல எண்ணில் சுமார் 1 செண்டு பரப்பளவில் ஆற்று மணலை அடித்து ஆக்கிரமிப்பு செய்ய எண்ணுகிறார். இது சம்பந்தமாக 1 ம்பிரதிவாதி மீது காவல்துறையிடம் புகார் கொடுத்தும், இதுநாள்வரையில் எந்தவித

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும மனுதாரர் சென்னை நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை வழக்கு எண். 4240/2025 னை தாக்கல் செய்து அதில் மேற்படி மனு குறித்து ஒரு வார காலத்திற்குள் விசாரணை செய்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கூறியதால், 1ம்பிரதிவாதி மீது விசாரணை மேற்கொண்டு இந்த வழக்கு முடியும் வரை உள்ளே செல்லமாட்டேன் என தெரிவித்துள்ளார். ஆனால், மீண்டும் 1ம் பிரதிவாதி கடந்த 5.4.2025ம் தேதி வாதிக்கு பாத்தியமான மேற்படி தாவா வழக்கில் மீண்டும் மணலை கொட்டி சேதப்படுத்தியதால் மனுதாரர் மீண்டும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, தாவா சொத்தை பாதுகாக்க வேலி போட முற்பட்டுள்ளார். ஆனால், 1ம் பிரதிவாதி அதனை தடுத்து மனுதாரர் மீதும், அவரது கணவர் மீதும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின் மீது 8.4.2025ம் தேதி விசாரணை மேற்கொண்டு 1ம் பிரதிவாதி இனிமேல் மேற்படி தாவா இடத்திற்குள் உள்ளே நுழைய மாட்டேன் என்று ஒப்புக்கொண்டு மீண்டும் அத்துமீறி நுழைந்து சேதப்படுத்த அதிகபட்சமான வாய்ப்பு உள்ளதால் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3.1ம் எதிர்மனுதார் / 1ம் பிரதிவாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:</u>**

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மனுவில் கண்ட மனுதாரர்/வாதி தாவா சொத்துக்களில் சேகருக்கு புல எண்.203க்கு மேற்கு பக்கம் தனித்து பட்டா பெற்றுள்ளார் என்றும், தெற்குபக்கம் சேகர் அரசு அனுமதியின்றி அனுபவம் செய்து வருகிறார் என்றும், அவரது அனுமதியின் பேரில் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்கிறார் என்பது பொய்யாகும். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் அனுபவம் செய்து வந்து அவருக்கு பின்பு 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தெற்குபக்கம் உள்ள 1ம் பிரதிவாதி வாதிக்கு பாத்தியம் 1 செண்டில் ஆற்றுமணல் கொட்டி இடையூறு செய்கிறார் எனில் சொத்து விவரத்தில் தெளிவாக துலக்கவில்லை என்றும், எந்த தேதியில் 10ம் பிரதிவாதி ஆற்றுமணல் கொட்டினார் என விளக்கவில்லை என்றும், எனவே மனுதார்/வாதியின் வழக்கை எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது.

**4.2 முதல் 8 எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:**

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மனுவில் கண்ட மனுதாரர்/வாதி கடந்த 9.10.2019 ம் தேதி HSD No: 42/1429–ன் படி பாப்பணம் சர்வே எண்.203/24 பரப்பளவு கொண்ட 0.02.00 ெஹக்டேருக்கு 5 ம் பிரதிவாதியான தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டது பொய் என்றும், உண்மையில் சர்வே எண்.203 ல் 68 ச.மீ நிலம் மட்டுமே 4 ம் பிரதிவாதியால் இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டுள்ளது என்றும், 5 ம் பிரதிவாதியால் சர்வே எண்.203 ஐ உட்பிரிவாக பிரித்து பலருக்கு பட்டா வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்றும், சர்வே எண்.203 உட்பிரிவு 203/24 ல் 68 ச.மீ காலிமனை இடத்தினை மட்டுமே, 4 வது பிரதிவாதி இலவச வீட்டுமனை ஒப்படையாக மனுதாரருக்கு வழங்கிய நிலையில் மனுதாரரின் உறவினர் கிராம உதவியாளர்களாக புரிந்தததை சாதகமாக பயன்படுத்தி, ஆவணங்களில் நத்தம் சர்வே எண்.0.02.00 ெஹக்டேர்(200 ச.மீ) நிலத்தினை மனுதாரருக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கியதாக மோசடியாக ஆவணங்களை திருத்தியும், சுரண்டியும் அளவுகளை மாற்றம் செய்து அதனடிப்படையில் 5 ம் பிரதிவாதியிடம் நகல்பட்டா பெற்றுள்ளார். எனவே மனுதார்/வாதியின் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது.

**5.தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7.தீர்வு முடிவு:–**

5(1). மனு, எதிருரை, வாதுரை, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரருக்கு கடந்த 09.10.2019 ம் தேதி HSD No.42/1429–ன் படி சர்வே எண்.203/24 படி அரசு நத்தம் புறம்போக்கு நிலத்திற்கு

துணை வட்டாட்சியர் அவர்கள் செயல்முறை ஆணையின் படி பரப்பளவு 0.02.00–க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தாவா புல எண்ணில் 1வது பிரதிவாதி மணலை கொட்டி பரப்பி ஆக்கிரமித்துள்ளதை அகற்ற வேண்டுமென்ற வாதம் முன்வைத்துள்ளார்.

7(3). எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்துக்களில் சேகருக்கு புல எண்.203–ன் படி மேற்கு பக்கம் தனித்து பட்டா பெற்றுள்ளார் என்றும், தெற்குபக்கம் சேகர் அரசு அனுமதியின்றி அனுபவம் செய்து வருகிறார் என்றும், அவரது அனுமதியின் பேரில் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்கிறார் என்பது பொய்யாகும். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் அனுபவம் செய்து வந்து அவருக்கு பின்பு 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தெற்குபக்கம் உள்ள 1ம் பிரதிவாதி வாதிக்கு பாத்தியம் 1 செண்டில் ஆற்றுமணல் கொட்டி இடையூறு செய்கிறார் எனில் சொத்து விவரத்தில் தெளிவாக குறிப்பிடவில்லை என்றும், எந்த தேதியில் 1ம் பிரதிவாதி ஆற்றுமணல் கொட்டினார் என குறிப்பிடவில்லை என்றும், எனவே மனுதார்/வாதியின் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் முன்வைத்துள்ளார்.

7(4). தாவா சொத்தை மனுதாரருக்கு கடந்த 09.10.2019ம் தேதி HSD No.42/1429–ன் படிசர்வே எண்.203/24 படி அரசு நத்தம் புறம்போக்கு நிலதிற்கு துணை வட்டாட்சியர் அவர்கள் மூலம் 5வது பிரதிவாதி செயல்முறை ஆணையின் படி பரப்பளவு 0.02.00–க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பரப்பளவை நாம் செண்ட் அளவுகளில் பார்த்தால் 4.94 செண்ட் வரை விஸ்தீரணம் உள்ளது. ஆனால் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்திற்கு வழங்கக்கூடிய உச்சவரம்பு அளவு 3 செண்டே ஆகும். ஆனால் இந்த வழக்கில் மனுதாரருக்கு 5 செண்ட் நிலம் பட்டாவாக கொடுக்கப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் புல எண்.203/24–ல் அளவுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதை நம்மால் காண முடிகிறது. மேலும் எ.ம.சா.ஆ.7 ஆவணமான செட்டில்மெண்ட் ஜமாபந்தி நபர்கள் சிட்டா ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அதிலும் விஸ்தீரணத்தில் அடித்தல் திருத்தல் காணப்படுகிறது. மேலும் எ.ம.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அதிலும் பரப்பளவில் அடித்தல் திருத்தம், இருப்பது நம்மால் அறிய முடிகிறது. இதனால் உண்மையிலேயே மனுதாரர் பெற்ற பட்டா

உண்மையானதா அல்லது வருவாய் ஆவணங்களில் திருத்தங்கள் மேற்கொண்டு மோசடியாக விஸ்தீரண அளவில் மாற்றம் செய்து பட்டா பெறப்பட்டதா என்ற ஐயப்பாட்டை உருவாக்கிறது. எனவே மேற்கூரிய காரணங்களை வைத்து பார்க்கும் போது இந்த வழக்கில் ஒட்டுமொத்த சங்கதிகளையும், சூழ்நிலைகளையும் கவனத்தில் நிறுத்தி பார்க்கும்பொழுது முதல்நிலை தோற்ற ஆதார வழக்கும், நீதியின் சமநிலையும், மனுதாரரின் நலச் சார்பாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவில்லை. இம்மனுவினை, அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு பெருத்த அநீதி ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையினால், இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**8.இறுதிமுடிவு:-**

இறுதியாக, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவாணம்**:- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவாணம்**:-

| | | |
|---|---|---|
| எ.ம.சா. ஆ.1 | 26.10.2024 | வீட்டுமனை ஒப்படைப்பு எண் 483/1434. |
| எ.ம.சா.ஆ.2 | 06.02.2025 | நத்தம் நிலவரி துாய சிட்டா. |
| எ.ம.சா.ஆ.3 | 09.05.2025 | கணினி பட்டா. |
| எ.ம.சா.ஆ.4 | 05.04.2025 | வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பு நோட்டீஸ். |
| எ.ம.சா.ஆ.5 | 09.04.2025 | காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட CSR ரசீது |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.6 | 02.08.2025 | வரைபடம் |
| எ.ம.சா.ஆ.7 | 02.08.2025 | கிராமத்தில் செட்டில் மெண்டு ஜமாபந்தி நபர்கள் சிட்டா |
| எ.ம.சா.ஆ.8 | 02.08.2025 | புல எண் திருத்தப்பட்டதற்கான ஒப்புகை சான்று |

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி,
IA.No. 01/2025
in
O.S.No. 237/2024
உத்தரவு
நாள். 11.8.2025